**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROJECT OF M/S. SUDHARSHAN MINING CORPORATION LOCATED AT S.F.NO: 77, OF KONDAPPANAICKENPATTY VILLAGE, SALEM TALUK, SALEM DISTRICT ON 26.02.2021 AT 11.00 AM IN VINAYAGA MISSIONS ANNAPOORANI THIRUMANA MAHAL NO 54, YERCAUD MAIN ROAD, KONDAPPANAICKENPATTY VILLAGE, SALEM TALUK AND SALEM DISTRICT.**

**PARTICIPANTS THIRUVALARKAL:**

| | | | |
|---|---|---|---|
| 1 | S.A. Raman, I.A.S. | : | The District Collector, Salem |
| 2 | Dr. V. Gopalakrishnan, M.E, Ph.D., | : | The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Salem. |
| 3 | G. Pasupathi | : | Project Proponent of M/s. Universal Mining Corporation, Kondappanaickenpatty, Salem |
| 4 | Dr. P.Thangaraj | : | EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions, Salem. |

The list (attendance register) of the public and Environmentalists ( 61 Nos.) are attended the public hearing is enclosed herewith.

At the outset, the District Environmental Engineer, TamilNadu Pollution Control Board, Salem welcomed the District Collector, Salem, EIA Consultant, Environmentalist, public and the project proponent for the public hearing of M/s. Sudharshan Mining Corporation located at Kondappanaickenpatty Village, Salem Taluk. He further requested the EIA consultant to present the details of the project on behalf of the project proponent. Thiru.P.Thangaraj, EIA Consultant, presented the project through Power Point presentation. Then the District Environmental Engineer, TamilNadu Pollution Control Board, Salem requested the public to give their opinion about the project by stating their name and the village.

Thiru. Raja, Vinayagampatti told that about 20 ladies from their village used to work in the quarry, now all are going to other places for construction work. If the Sudharshan Mining Corporation opens they may find work again in the quarry, which will be helpful.

Thiru.Balu, Chettichavadi told that he used to work as driver in the quarry and since it has been closed for the last three years, because of which he is affected. He requested to take steps to reopen Sudharshan Mining Corporation.

Thiru.H.Madhubabu, Environment & Social Activist requested to give employment for the local people and develop green belt which will control dust pollution. He also requested to utilize the CSR fund for the affected area.

Thiru. V. Sunanda Reddy, Environmentalist stated that he is an environmentalist who supports industrialization because unemployment is high in India. Only 5 – 6 lakh people are getting employed in about 10 crore of people who are searching for jobs, rest all are unemployed and is suffering. So he requested that the mining activity shall be opened to create job opportunity and he support the grant of environmental clearance. He also requested the mining activity shall not cause damage to the environment and shall protect and improve the public sustenance.

Thiru.Ramesh, Environmentalist requested that the mining activity shall not cause damage to the environment and child labour should not be employed. He also requested to follow the safety guidelines and provide medical camps to the nearby villages. He also informed that he supports the Sudharshan Mining Corporation.

Thiru..Ashok, Environmentalist reported that he support the opening of Sudharshan Mining Corporation and recommend to MoEF & CC.

Finally the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board stated that the views and comments of the public have been recorded through audio and video arrangement and also the received written views/opinions will be submitted to State Environmental Impact Assessment Authority and with that the meeting came to an end with vote of thanks.

Encl: 1. Copy of Attendance Register
2. Copy of written views and comments -5 Nos

26/02/2021

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Salem.

26/2/21.

District Collector,
Salem District,
Salem.

5/5

**<u>தி/ள். சுதர்ஷன் மைனிங் கார்ப்பரேஷன். புல.எண்.77, கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமம், சேலம் தாலுகா, சேலம் மாவட்டத்தில் சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் சேலம் மாவட்டம், சேலம் வட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள தி/ள்.விநாயகா மிஷன்ஸ் அன்னபூரணி திருமண மஹாலில் 26.02.2021 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்ற பொது மக்கள் கருத்து கேட்கும் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.</u>**

<u>கலந்துகொண்ட அலுவலர்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.S.A. ராமன், இ.ஆ.ப., | : | மாவட்ட ஆட்சியர், சேலம் |
| 2 | முனைவர்.திரு.வெ.கோபாலகிருஷ்ணன், எம்.இ., பி.எச்.டி., | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம். |
| 3 | திரு.G.பசுபதி | : | சுரங்க உரிமையாளர், தி/ள்.சுதர்ஷன்மைனிங் கார்ப்பரேஷன், கொண்டப்பநாயக்கன்பட்டி, சேலம். |
| 4 | முனைவர். P. தங்கராஜ் | : | புவியியலாளர் மற்றும் ஆலோசகர், தி/ள். ஜியோ எக்ஸ்ப்ளோரேஷன் & மைனிங் சொல்யூசன்ஸ், சேலம். |

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பொது மக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் எண்ணிக்கை: 61 (வருகைப் பதிவேட்டின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

ஆரம்பத்தில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம் அவர்கள் சுரங்க உரிமையாளர் அவர்கள் சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி வட்டத்தில் அமைந்துள்ள தி/ள். சுதர்ஷன் மைனிங் கார்ப்பரேஷன் என்ற சுரங்கத்தின் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களையும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் வரவேற்றார். பின்பு நிர்வாகத்தின் சார்பில் திட்டத்தினை பற்றி நிர்வாகத்தின் ஆலோசகர் அவர்கள் விளக்கி கூறுவார்கள் என்று கூறினார்.

திரு.Dr.ப.தங்கராஜ், புவியியலாளர் மற்றும் ஆலோசகர் அவர்கள் திட்டத்தினை பற்றி பவர் பாயிண்ட் மூலம். விளக்கி கூறினார். அதன் பின்பு மாவட்ட சுற்றுற்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம் அவர்கள் இநத் திட்டத்தினை பற்றி கருத்து கூற விரும்புவர்கள் தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை கூறிவிட்டு கருத்து கூற கேட்டுக்கொண்டார்.

திரு.ராஜா, விநாயகம்பட்டி, முன்னாள் பஞ்சாயத்து தலைவர் அவர்கள் தன்னுடைய வீட்டிற்கு அருகில் 20க்கும் மேற்பட்ட பெண்கள் இந்த சுரங்கத்தில் வேலை செய்து வந்தாகவும், தற்போது கட்டிட வேலைக்காக வெளியூர் சென்று வேலை செய்வதாகவும்,, இந்த சுரங்கம் திறக்கப்பட்டால் அவர்களுக்கு மிகுந்த உதவியாக இருக்கும் எனவும் கூறினார்.

திரு.பாலு, செட்டிச்சாவடி அவர்கள் தான் இந்த சுரங்கத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வந்ததாகவும், தற்போது 3 வருடமாக சுரங்க வேலை இல்லாததால் மிகவும் கஷ்டப்படுவதாகவும், சுரங்கம் மறுபடியும் திறக்கப்பெற்றால் தனக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் எனவும் தாங்கள் வழிவகை செய்ய வேண்டும் எனவும் கூறினார்.

திரு. மதுபாபு, சுற்றுச்சூழல் ஆர்வலர் அவர்கள் தி/ள். சுதர்ஷன் மைனிங் கார்ப்பரேஷன் திறக்கப்பெற்றால் அதிக மக்கள் வேலை வாய்ப்பை பெறுவார்கள் எனவும், மேலும் சுற்றுச்சூழல் பாதிக்காதவாறு சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்நிறுவனம் செயல்பட வழிவகை செய்ய வேண்டும் எனவும் கூறினார்.

திரு.சுனந்தா ரெட்டி, சுற்றுச்சூழல் ஆர்வலர்அவர்கள் தான் ஒரு தொழிற்சாலைகளின் வளர்ச்சியை விரும்பும் சுற்றுச்சூழல் ஆர்வலர் எனவும், இந்தியாவில் வேலையின்மை ஒரு முக்கிய பிரச்சனையாக உள்ளதாகவும் தெரிவித்தார்கள். வருடந்தோறும் இந்தியாவில் 10 கோடி இளைஞர்கள் வேலை வாய்ப்பிற்கு தேடி வருவதாகவும், அதில் 5 முதல் 6 இலட்சம் பேருக்கு தான் வேலை கிடைப்பதாகவும், மீதமுள்ள அனைவரும் வேலையின்றி மிகுந்த சிரமத்திற்கு ஆளாவதாகவும் தெரிவித்தார். எனவே சுரங்கம் திறக்கப்பட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கவேண்டும் என தெரிவித்தார். இந்த சுரங்கத்தின் உற்பத்தியை தொடங்க சுற்றுச்சூழல் அனுமதி கிடைக்க தான் பரிந்துரைப்பதாகவும், சுரங்கமானது சுற்றுச்சூழலை பாதிக்காத வண்ணம் இயங்கி, பொதுக்களின் வாழ்வாதாரங்களை பாதுகாக்க வேண்டும் எனவும் கெட்டுக்கொண்டார்.

திரு.ரமேஷ், சுற்றுச்சூழல் ஆர்வலர் அவர்கள் தி/ள். சுதர்ஷன் மைனிங் கார்ப்பரேஷன் சுரங்கத்தினால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாம்ல் இருக்க வேண்டும், இந்த சுரங்கத்தில் குழந்தை தொழிலாளர்கள் பணியமர்த்த படக்கூடாது எனவும், பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும், அருகில் உள்ள கிராமங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படவேண்டும் எனவும்., இந்த தி/ள். சுதர்ஷன் மைனிங் கார்ப்பரேஷன் அமைய தான் தன்னுடைய ஆதலவை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

திரு. அசோக், சுற்றுச்சூழல் ஆர்வலர் அவர்கள் தி/ள். சுதர்ஷன் மைனிங் கார்ப்பரேஷன் அமைய சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்கு தான் பரிந்துரை செய்வதாகவும் தெரிவித்தார்.

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்களின் மனுக்களும், கருத்துக்கேட்பு கூட்ட நடவடிக்கைகள் அனைத்தும் ஒலி மற்றும் ஒளி வடிவில் பதிவு செய்யப்பட்டும், பொது மக்களின் மனுக்கள் இணைக்கப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனவும், அதனை பரிசீலனை செய்து சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும் எனவும் தெரிவித்தார். பொது மக்களின் கருத்துக் கேட்புரையானது நன்றியுரையுடன் நிறைவு பெற்றது.

இணைப்பு : 1. வருகைப் பதிவேடு நகல்
2. பொதுமக்களின் எழுத்துக் கருத்துக்கள் – 5 எண்கள்

26/02/21

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
சேலம்

26/2/21

மாவட்ட ஆட்சியர்
சேலம் மாவட்டம்
சேலம்

4/5